# 23 சூழலைப் பாதுகாப்போம்

சைவ சமயம் இறைவன் இயற்கையோடு இயைந்திருப்பது பற்றி எடுத்துக் கூறுகின்றது. எனவே இயற்கையுடன் மனிதன் அன்பான உறவைப்பேணுதலே உயர்ந்த வாழ்க்கையாகும். அவன் உலகத்தில் தோன்றும் பொழுதே இயற்கைச் சூழலுடன் இணைகின்றான். அச்சூழலே அவனது வாழ்க்கையை நிர்ணயிக்கின்றது. மனிதனது வாழ்க்கை அகச்சூழல், புறச்சூழல் என்பவற்றால் உருவாக்கம் பெறுகின்றது. அகச்சூழல் மனிதனின் ஆன்மா சம்மந்தமானது. புறச்சுழல் இயற்கை சம்மந்தமானது. புறச்சூழலில் இயற்கை வளங்கள் பிரதான பங்கெடுக்கின்றன.

நாம் வாழும் இப்பிரபஞ்சத்தில் அடங்கியுள்ள நிலம், நீர் தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களினதும் இயக்கத்திற்கு காரணமாக இருப்பது இறைசக்தியே. இப்பூவுலகில் வாழும் உயிரினங்களின் வாழ்விற்கு இவை ஒவ்வொன்றும் அத்தியாவசியமானவை.

சூழல் என்னும் போது நிலம், நீர், வளி, உயிரினம் என்பன முக்கியமாக கருத்தில் கொள்ளப்படுகின்றன. நிலமகளை தாயாகவும் தெய்வமாகவும் போற்றும் மரபும் சைவத்தில் உண்டு. பண்டையத் தமிழ் மக்கள் சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்கும் உரிய தெய்வங்களாக முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்களை போற்றி வழிபட்டனர். கோயில் அதன் சுற்றாடலின் தூய்மை என்பன பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் சமயத்துடன் இணைந்த விதத்தில் மக்கள் மத்தியில் பண்டைக்காலம் தொட்டு நிலை பெற்றிருந்தது.

வேதகாலத்தில் வாழ்ந்த மக்கள் இடி, மழை, காற்று, நீர் ஆகியவற்றில் அளப்பரிய சக்தி உண்டென்பதைக் கண்டனர். இச்சக்தியை இறைவனாக போற்றினர். அக்கினி, இந்திரன், வருணன், வாயு ஆகியவற்றின் மீது தோத்திரப்பாடல்களைப் பாடிப் பரவினர். நாயன்மார்களுள் இயற்கையில் இறைவனை கண்டவராக சிறப்பித்துப் போற்றப்படுபவர் திருஞானசம்பந்தர். இவரது திருக்கேதீச்சரப் பதிகத்தில் வரும்,

**பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்**
**லுலகினில் லுயிர் வாழ்க்கை**
**கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்**
**காதலித் துறைகோயில்**
**வண்டு பண்செயு மாமலர்ப் பொழின்மஞ்ஞை**
**நடமிடும் மாதோட்டந்**
**தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்கே**
**தீச்சர மதுதானே**

என்னும் தேவாரத்தில் இருந்து இதனை உணரலாம். இயற்கைக் காட்சியை அல்லது அதன் அழகை வர்ணித்து அவ்வாறான அழகுள்ள இடத்தில் கோயில் கொண்டருளியுள்ள இறைவனின் திருவருட் சிறப்பை வியந்து போற்றுகின்றார். இயற்கை அழகை பேணுதல் அதன் சுத்தத்தை பாதுகாத்தல் என்பன மானிடர் இறைவனுக்குச் செய்யும் கைங்கரியமாகவே சைவ சமயம் கருதுகின்றது.

சைவ சமயம் கூறும் சரியை நெறியானது சூழல், சூழலின் தூய்மை அவற்றின் பாதுகாப்பு, சுகாதார பழக்கவழக்கங்களை மானிடரிடையே வளர்க்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டது. சரியைத் தொண்டாற்றும் அடியார்கள் நாடோறும் பொழுது புலர்வதன் முன் நித்திரை விட்டெழுந்து ஆசார சீலராக திருக்கோயிலுக்குச் சென்று தமது பணிகளை ஆரம்பிக்க வேண்டும். கோயிலின் சுற்றாடலிலுள்ள புல் பூண்டுகளை அகற்றி துப்பரவு செய்தல் வேண்டும். ஆலயத்தின் வீதியை கூட்டுதல், மண்டபங்களை கூட்டுதலும் கழுவுதலும் மெழுக வேண்டிய இடங்கள் இருப்பின் அவற்றை பசுவின் சானத்தினால் மெழுகுதலும் வேண்டும். நீர் தெழிக்க வேண்டிய இடங்களுக்கு நீர் தெழித்தல் வேண்டும். கோயிலின் பூந்தோட்டத்தை பராமரித்தல் வேண்டும். வில்வம், மலர் முதலியவற்றை எடுத்து மாலை தொடுத்து பூசைக்காக கொடுத்துதவ வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க உதவுகின்றது. இம்மனப்பாங்கு தமது இல்லத்தையும் அதனைச்சார்ந்த இடங்களையும் தூய்மையாக வைத்திருக்கும் இயல்பை வளர்க்கும். இவ்வாறான பரந்த மனப்பாங்கின் விருத்தியை நோக்கியே ‘‘**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**’’ என்று ஆன்றோர் கருதினர்.

ஆரம்ப காலத்தில் கோயில்கள் நீர் வசதியுள்ள அல்லது நீர் நிலைகளை அண்மித்த பகுதிகளிலேயே அமைந்திருந்தன. கோயிலின் விசேடத்தைப் பற்றிக் கூறும் போது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றின் அடிப்படையில் நோக்கும் வழக்கம் சைவ சமயத்திலுள்ளது. கோயிலில் எழுந்தருளியுள்ள மூலவரின் சிறப்பு, அத்தலத்தின் வரலாறு அதன் அயலிலுள்ள தீர்த்தத்தின் விசேடம் என்பன ஆலயத்தின் பெருமையை உயர்வடையச் செய்கின்றன. பாலாவிக் கரையில் அமைந்த திருக்கேதீச்சரம், பாவநாச தீர்த்தத்தைக் கொண்டுள்ள திருக்கோணேச்சரமும் மாணிக்கங்கைக் கரையிலமைந்த கதிர்காமமும் கீரிமலைத்தீர்த்தத்தைக் கொண்டுள்ள நகுலேச்சரத்தையும் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஒரு நாட்டில் இயற்கை வளமாகிய காட்டு வளம் சிறந்ததாக அமையும் போது நாடு வளம் பெறுகின்றது. காட்டு வளமே மழை வளத்தைத் தருகிறது. காட்டை அழியாது பாதுகாத்தல் சைவ மக்களின் பொறுப்பாகும் காடுகளே நாடடின் இயற்கை வளத்தையும் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தும் சாதனங்களில் ஒன்றாக அமைகின்றது என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். காற்றை மாசடையாது பாதுகாப்பதன் மூலமும் நாம் தூய காற்றைப் பெற்று ஆரோக்கியமாக வாழ முடியும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

நாம் வீடுகட்டும் பொழுது வாஸ்த்து சாஸ்த்திரத்தையும் சூழலையும் கருத்தில் கொண்டு கட்ட வேண்டும். வாஸ்த்து சாஸ்த்திரம் என்பது மனை எவ்வாறு சூழலுடன் அமைய வேண்டும் என்பதைக் கூறுவது. வீடு கட்டும் பொழுது வாழ்வாதாரமான சிறந்த காற்றோட்டமும் சுத்தமான நீரும் பெறக் கூடிய வகையில் அமைதல் வேண்டும். வீட்டைச்சுற்றி சிறந்த பூந்தோட்டம் நிழல் தரும் மரங்கள், கனிதரும் மரங்கள் முதலானவை நாட்டப்பட வேண்டும். வீட்டைச் சூழலுடன் இணைந்து வாழும் மனிதன் வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் பெறுகின்றான். தூய்மையாய் இருக்கும் வீட்டில் தெய்வம் உறைவதாக நம்பப்படுகின்றது. கிராமத்தில் உள்ள இயற்கை வளங்களை தூய்மையாக வைத்திருக்கும் போது கிராமம் அழகு பெறுகின்றது. மக்கள் சுபீட்சம் அடைகின்றனர். நகரம் மக்கள் அடர்த்தியும் போக்குவரத்து நெரிசலும் சிறிய பெரிய தொழிற்சாலைகளையும் பல உயரிய கட்டடங்களைக் கொண்டது அதனை மாசடையாது பாதுகாப்பதற்கு மரங்களை நாட்டுதல் கழிவுகளை அகற்றுதல், கழிவு நீர்களை அகற்றுதல் கழிவுப் புகைகளைக் கட்டுப்படுத்தல் முதலான பணிகளில் ஈடுபட்டு நகரின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க முயல வேண்டும்.

இவ்வாறு சைவ மதத்தை சார்ந்த இளைய சமுதாயத்தவராகிய நாம் சூழலையும் அதன் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு அவற்றைப் பேணிக்காத்து எதிர்காலச் சந்ததியினருக்குக் கையளிப்போம்.

**“ மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடுவோம்.”**



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

## பாடச்சுருக்கம்

- இறைவன் இயற்கையோடு இணைந்துள்ளான்.
- பண்டைய மக்கள் இயற்கையில் இறைவனைக் கண்டு வழிப்பட்டனர என்பதற்கு சான்றுகளுண்டு.
- இயற்கைகளைப் பாதுகாத்து வாழ முயற்சிக்க வேண்டும்.

## பயிற்சிகள்

**அ. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. உங்கள் ஆலய, வீட்டுச் சூழலில் அவதானித்தவற்றை கூறுக.
2. இயற்கையில் இறைவனைக் கண்டு பாடிய நாயனார் யார்?
3. ஐம்பூதங்களும் யாவை?
4. மூத்தவர்களை கனம் பண்ணுதல் மரியாதை செய்தல் பற்றி கூறுக.
5. சங்க காலத் தெய்வங்கள் எவை?

## ௐ செயற்பாடு

- ♦ தினமும் காலையில் சூழலை தாய் தந்தையுடன் சேர்ந்து சுத்தப்படுத்தி காட்சிப்படுத்துக.
- ♦ சமுக நிறுவனங்களுக்குச் சென்று, சில பணிகளைச் செய்து அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.